Government of Madras

THE REVISED SYLLABUS

In Tamil

For Elementary Schools

Standards I to V.

சென்னை சர்க்கார் ஆரம்பப் பாட சாலைகளின் புதுப்பாடத் திட்டம்.

(ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை)

(Permission granted by the Director of Public Instruction, Madras, R. C. No. 1493 E/34 Dated 2nd, August 1939.)

Translation by

Pandit: K. J. Vethamuthu.

983

உள்ளுறை

					பக்கம்
முதல் வகுப்புப் பாடத்திட்டம்.		...	...		1
இரண்டாம் ,,	,,	...	...	...	7
மூன்றாம் ,,	,,	...	...	...	12
நான்காம் ,,	,,	...	...	...	19
ஐந்தாம் ,,	,,	...	...	...	27

Price 2 As] [விலை 2 அணா

SYLLABUS FOR ELEMENTARY SCHOOLS.

சென்னை மாகாண ஆரம்பப் பாடசாலை பாடக்குறிப்புகள்.

Subjects of Study: கற்கவேண்டிய விஷயங்கள்:

Elementary or Primary Stage—Standards I to V:
ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை உள்ள கீழ்த்தர வகுப்புப் பாட விஷயங்கள்:

992
1019
371.3

கட்டாயப் பாடங்கள்.
Compulsory Subjects.

1. தாய் மொழி.
2. ஆரம்பக் கணிதம்.
3. இயற்கைப்பாடமும் தோட்டவேலையும்.
4. தேகாப்பியாசம்.
5. பூகோளம், சரித்திரம், தேசபரிபாலனமும்.
6. சுகாதாரம், இல்லற வேலை. பெண்பிள்ளைகளுக்குத் தையல் பின்னல்.
7. சங்கீதம்.
8. கைவேலைகள் (Handicrafts)

மற்ற பாடங்கள்.
Optional Subjects.

1. சித்திரம்.
2. இங்கிலீஷ்.
3. முதலுதவி.
4. இரண்டாம் மொழி. (மகமதிய பாடசாலைகளி லும் இரு பாஷை பேசும் இடங்களிலும்)
5. மதத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் உரிய போதனைகள்.

Syllabus for First Class.

முதல் வகுப்புப் பாடக் குறிப்புகள்.

ஐந்தரை வயது முதல் ஆறரை வயது வரை உள்ள முதல் வகுப்புப் பிள்ளைகள்.

தாய்மொழி:— First Language:—

வருடத்தின் முதல் இரண்டொரு மாதங்கள் உபாத்தியாயர் பிள்ளைகளோடு தாராளமாய்ப் பழகிப் புழங்கவேண்டும். சம்பாஷணை செய்தல், கதை சொல்லல், முதலியன புதிதாகப் பள்ளிக்கு வரும் பிள்ளைகளின் கூச்சத்தைப் போக்குவதற்கு சிறந்த வழிகளாகும். ஆசிரியர் இதில் தம் கவனத்தை அதிகமாகச் செலுத்தவேண்டும். வருடத்தின் மற்ற மாதங்களில் சம்பாஷணை செய்தல், கதை சொல்லுதல்களின் முக்கிய நோக்கமாவது, பிள்ளைகள் தெளிவாகவும், திருத்தமாகவும், இயற்கையாகவும் பேசக் கற்பிப்பதேயாம். அப்படிப் பேசக் கற்கும்போது சாதாரணமாகப் பேசிவரும் வார்த்தைகளை அதிகம் வழங்குவதற்கும் கொச்சை வார்த்தைகளும், வாக்கியங்களும் அதிகம் வழங்காமல் இருப்பதற்கும் ஏதோ ஒரு இடத்தில் பேசப்படும் மொழிகள் உச்சரிக்கும்போது அஜாக்கிரதையாக மொழியின் கடைசியில் எழுத்தை விழுங்கி விடுதல், மொழியின் முடிவில் அர்த்தமாகாமல் குளறிப் பேசுதல், முதலியவற்றைத் திருத்துவதற்கும், அனுகூலமாகச் சிறு சிறு வாக்கியங்களை வழங்கக் கற்றுக் கொள்ளவேண்டியதும் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

சம்பாஷணை செய்வதற்கும், ஆசிரியரும் பிள்ளைகளும் ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொள்வதற்கும் ஆலோசனையாக எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயக் குறிப்புகளாவன:—

(1) வகுப்பில் சொல்லப்பட்ட கதைகள் அல்லது ஏதோ ஒரு பிள்ளை பள்ளிக்கு வருமுன்னமேயே தெரிந்த கதைகள், சிறு குழந்தைப் பாட்டுகள் (Nursery rhymes), அபிநயப்பாட்டுகள் முதலியன.

(2) குடும்பம்:— வீட்டில் நடக்கும் குடும்ப காரியம், வீட்டு வேலை, அங்கு விளையாடும் விளையாட்டுகள் முதலியன.

(3) பாடசாலை:— ஆசிரியர், வகுப்பில் படிக்கும் உடன் மாணவர்கள், படங்கள், பாட விளக்க அட்டைகள்.

4) பழக்கவழக்கங்கள்:— பாடசாலையிலும், வெளியிடங்களிலும், வீட்டிலும் ஒருவர்க்கொருவர் நடந்து கொள்ளும் விதம், சாதாரண மிருகங்கள், பட்சிகள் இவைகளிடத்தில் காட்டும் பட்சம்.

(5) விடுமுறை நாட்கள்:— விருந்துகள், உற்சவங்கள்.

(6) கைத்தொழில்கள்:

(7) சுகாதாரவிதிகள்:— தேகத்தை எப்படிப் பேணுதல் என்ற விஷயங்கள்.

வாசிப்பு:—

இந்த வகுப்பில் வாசிப்பு என்பது அநேகமாய்ப் பிள்ளைகள் ஒன்றைப் பார்த்ததையோ அல்லது கேட்டதையோ வாயில் சொல்வதாகத்தான் இருக்கும். மற்றும் அவ்வாறு வாயில் சொல்வதானது முன்னமேயே தாங்கள் தெரிந்ததும், தங்கள் பேச்சில் வழங்கினதுமான வார்த்தைகளைப் பிள்ளைகள் நன்றாய்த் தெரிந்துகொண்டு சத்தமாக வாசிக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும். ஒரு சாதாரண அறிவுள்ள பிள்ளை முதலாம் வகுப்பைப் படித்து முடிக்கும்போது பாடவிளக்க அட்டைகள் பாட விளக்குத்துண்டு அட்டைகள் மூலமாய்க் கற்ற சுமார் 300 வார்த்தைகளையும், அம்மூன்நூறு வார்த்தைகளைக் கொண்டு அமைந்த சிறு சிறு வாக்கியங்களையும், சரியாய்த் தெரிந்துகொண்டு வாசிக்க கற்றுக் கொள்ளவேண்டும்.

கையெழுத்து:—

கரும்பலகை, பாடவிளக்க அட்டைகள், பாடசாலையில் உபயோகிக்கப்படும் உபகரணங்கள் முதலியவற்றில் எழுதப்பட்டிருப்பவைகளையும் அல்லது தாம் கற்றுக்கொண்ட வார்த்தைகள் அல்லது சிறு சிறு வாக்கியங்களையும் சுயமாக எழுதப் பழக வேண்டும்.

கோடுக்கப்படும் உபகரணங்களாவன:—

படமும் வார்த்தையும் எழுதிய அட்டைகள், விளக்கத் துண்டு அட்டைகள், வார்த்தை உண்டாகும் எழுத்துக் கட்டைகள். விளக்கப்படப் புத்தகங்கள் முதலியவைகள், நல்ல உபகரணங்கள்.

கணிதம் — Mathematics.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற நாலு முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட கணக்குகளைப் பிள்ளைகள் செய்ய அவகாசம் அளிப்பதானது அவர்கள் விரைவாகவும் சரியாகவும் கணக்குப் போடுவதற்கு ஏற்ற ஓர் சிறந்த அஸ்திபாரமாகும். இந்த அவகாசத்தைப் பெறுவதற்குக் கீழ்த்தர வகுப்புகளில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், கணக்குகள் அடிக்கடி கொடுப்பது மிகவும் அவசியமானது. மேல் வகுப்புக்கு வரும்போது பிள்ளைகள் கீழ்வகுப்புகளில் கற்றுக் கொண்டவைகளை மறக்காமலிருப்பதற்கு அடிக்கடி அவைகளில் அப்பியாசம் கொடுக்கவேண்டும்.

1. முதல் 10 வரை எண்ணல்.
பின்பு பத்துப் பத்தாக நூறு வரை எண்ணல்.

2. 1முதல் 10 வரைக்கும் எண் குறிப்பு.

ஒவ்வொரு எண்ணையும் கூட்டி அதன் தொகை 10க்கு மேற்படாத சுலபமான கணக்குகள்; பத்துக்குள்ளாகச் சுலபமான கூட்டல்; பத்துவரைக்கும் சுலபமான கழித்தல்.

செய்யத்தக்க கை வேலைகள்.

1 பத்துவரைக்கும் பல எண்ணிக்கையுள்ள குறிப்பிட்ட பொருள்களைக் கையில் எடுத்தல்.

2 பார்த்த பார்வையில் இரண்டு, மூன்று, அல்லது நான்கு அடங்கிய பொருட்களை இத்தனை என்று நிதானித்தல்.

3 ஐந்து முதல் பத்துவரை எண்ணிக்கையுள்ள பொருட்களை ஒவ்வொன்றாகவும் இரண்டிரண்டாகவும் மூன்று மூன்றாகவும் நான்கு நான்காகவும் ஒன்று சேர்த்தல்.

4 பாட விளக்கப்பட அட்டையிலிருந்து 1 முதல் 10 வரையிலும் உள்ள எண்களைப் பிள்ளைகள் தொட்டுக் காட்டுவதுடன் அவ்வெண்களுக்குட்பட்ட எந்த எண்ணையும் எழுத வாசிக்க அறிவது.

5 கணக்கு, விளையாட்டுகளில் பயிற்சி.

இயற்கைப்பாடமும் பாடசாலைத் தோட்டவேலையும்.
Nature Study & School Gardening

1 மரஞ்செடி கொடிகளைக் கவனித்தல்; மரங்கள், செடிகள், பழங்கள், புஷ்பங்கள் இன்னவென்று அறிந்து அதனை நிர்ணயித்தல்.

2 பிள்ளைகள் தாங்கள் பார்க்கும் மிருகங்களின் பெயர்களைப் படித்தல்.

3 பிள்ளைகள் சுற்றுப்புறங்களில் காணும் பறவைகள் புழுப் பூச்சிகளை உற்று நோக்குதல்.

செய்யத்தக்க கை வேலைகள்:— விதைகள், இலைகள், பூக்கள், சிப்பிகள், இறகுகள் முதலியன சேகரித்தல்.

தேசபரிபாலனம் — Civics.

தேசபரிபாலன விஷயங்களைச் சரியாக நாலாம் வகுப்பில் ஆரம்பிக்கலாம். ஆயினும் 1 முதல் 3ம் வகுப்புவரை பின்வருபவைகளைக் கதைகள் மூலமாகவும், கண்ணால் காணக்கூடிய பொருட்கள் மூலமாகவும் ஜீவியத்திலிருந்து திருஷ்டாந்தப் படுத்திப் போதிக்கலாம்.

1 குடும்பத்திலே ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய கடமைகள், அவர்கள் பொறுப்புகள், முதியோர்க்குச் செய்ய வேண்டிய மரியாதை.

2 ஒரு கிராமம், ஒரு சமுகக்கூட்டம், பலவித தொழிலாளர்; பிறரிடத்தில் உணவு உடை முதலிய விஷயங்களில் நாம் கடமைப் பட்டுள்ளது; மனிதர் ஒருவரையொருவர் சார்ந்து பிழைத்தல்.

3 நல்ல பழக்க வழக்கங்கள்;— எல்லா ஜீவன்களிடத்தும் ஜீவ காருண்யம் காட்டுதல்; தாழ்ந்தவர்களிடத்தும் நம்மைப் பார்க்கிலும் கீழ் நிலையில் இருப்பவர்களிடத்தும் அன்பு பாராட்டுதல்; பிறர் எண்ணங்களுக்கும், பிறர் பொருளுரிமைக்கும் மரியாதை காட்டல் முதலியவைகள்.

4 சுத்த பழக்க வழக்கங்களை அப்பியசித்தல்; நம்மையும் நமது சுற்றுப் புறங்களையும் சுத்தமாய் வைத்தல்; பொருட்களை அதனதன் இடத்தில் ஒழுங்காக வைத்தல் முதலியன.

5 சுகாதார சம்பந்தமான விளையாட்டின் விதிகள் அறிதல். பாலர் செஞ்சிலுவைப் பிரசுரங்களில் அடங்கிய விதிகளை பிள்ளைகள் கற்பது நலம். பிள்ளைகளுக்கு இந்த விதிகளின் மேன்மை விளங்க வேண்டும். ஒரு பிள்ளை பல் விளக்காமலோ அல்லது அழுக்குப் படிந்த கைகளுடனே, அல்லது தேகாரோக்கிய விதிகளை எவ்விதத்திலாகிலும் மீறியோ, பள்ளிக்கூடத்திற்கு வருமேயானால் உபாத்தியாயர் அப்படிப்பட்ட பிள்ளைகளை நன்றாய்க் கவனித்து நல்லொழுக்கங்களை வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் சரியாய்க் கைக்கொண்டு நடக்கும்படி புத்தி சொல்லவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருநாளும் கொஞ்ச நேரம் சுத்தம் பண்ணி அதைப் பார்வைக்கு அழகாக வைத்துக் கொள்ள உபாத்தியாயர் முயற்சி செய்யவேண்டும் இந்த வயதில் பிறரை அனுசரிக்கிற வழக்கம் அதிக பலமுள்ளது ஆகையால் உபாத்தியாயர் சுத்த பழக்க வழக்கங்களைத் தாம் அனுசரிப்பதினாலும் பள்ளிக்கூடத்திலும் வெளியிடங்களிலும் அவர்களைக் கவலையாய்க் கவனிப்பதினாலும் அவரே சிறுவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கலாம்.

சங்கீதம் — Music.

கிண்டர்கார்ட்டன் விளையாட்டுகளை ஒட்டிய பாட்டுகள், அபிநயப்பாட்டுகள், நாட்டுப்பாட்டுகள் இவைகளில் சுலபமான இரண்டொரு சரணங்கள் அடங்கிய பாட்டுகள்.

குறிப்பு:— சிறு வகுப்புகளில் எந்தப் பாட்டுகள் கற்பிக்கப் படுகின்றனவோ அந்தப் பாட்டுகளில் உள்ள வார்த்தைகள் கூடியவரைக்கும் பிள்ளைகள் இலேசாய் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். மற்றும் சிறு வகுப்புகளில் பிள்ளைகளுக்கு அர்த்தம்விளங்காத கீர்த்தனைகளை நீக்கவேண்டும்.

2 ஐந்தாம் வகுப்பு வரைக்கும் கற்பிக்கும் பாட்டுகள் காதிலே கேட்டு வாயிலே பாடிக்கொள்ளத் தக்கதாகப் படிப்பிக்க வேண்டும்.

3 கோலாட்டம், கும்மி இவைகளோடு சேர்ந்த நாட்டு வாசிகளின் ஆட்டமும் சேர்க்கப்படலாம்.

4 பிள்ளைகள் பாடும்போது தொண்டையைக் கிழித்துக் கொண்டு பாடாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். மூன்றும் வகுப்புவரையில் மத்திய ஸ்தாயி ஒருகட்டையளவில்தான் பாடவேண்டும்.

Syllabus for Second Class.

இரண்டாம் வகுப்புப் பாடக்குறிப்புகள்

தாய்மொழி—First Language:

1. வாய் மொழி:

(a) முதலாம் வகுப்பில் வந்த விஷயங்களை ஒட்டிய சம்பாஷணைகள் தொடர்ந்தேர்ச்சியாய் நடக்கவேண்டும். அவ்விதச் சம்பாஷணைகளில் புதிய வார்த்தைகள் அதிகமாய் வரப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு சிறு சம்பவத்தைப் பிள்ளைகள் சரியான பிரகாரம் தொடக்கமும் முடிவும் இருக்க ஒழுங்கு படுத்திக் கதை ரூபத்தில் சொல்வதற்கு வேண்டிய அப்பியாசம் அளிக்கவேண்டும்.

(b) சாதாரண சிறு நாடகங்கள் நடிக்கவும் சம்பாஷணைகள் செய்பவும் பயிற்சி கொடுத்தல்.

(c) பல குழந்தைப் பாட்டும் அபிநயப்பாட்டும் பாடல்.

2. வாசிப்பு.

(a) பிள்ளைகளுக்குத் தெரிந்த வார்த்தைகளோடு இன்னும் அதிகம் தெரிய, வாசகப் புத்தகம் அல்லது வார்த்தைகளும்

வாக்கியங்களும் அடங்கிய அட்டைத் துண்டுகளைப் படித்தல். அதில் முதல் வகுப்பில் கற்றதோடு 400 புதிய வார்த்தைகளைப் பிள்ளைகள் கற்கவேண்டும்.

மௌனவாசிப்பு:— இந்தப் பயிற்சியில் 60 பங்கு சத்தம் போட்டு வாசிப்பதாக இருந்தால் 40 பங்கு மௌன வாசிப்பாக இருக்கவேண்டும். இந்த மௌன வாசிப்பில் பின்வரும் விஷயங்கள் வரலாம்.

(a) பாடவிளக்க அட்டைகளில் என்ன செய்யச் சொல்லி எழுதியிருக்குமோ அதைப் பிள்ளைகள் வாசித்து அதன்படி உடனே செய்யப்பயிற்சி. மற்றப் பாடங்களுக்கும், கைத் தொழிலுக்கும், பிராஜெக்ட் வேலைக்கும் ஆசிரியர் எழுதும் கட்டளைகளை மௌனமாய் வாசித்ததும் அதை நிறைவேற்றப் பயிற்சி.

(b) தலைப்பு 1 பிரிவு b-ல் காட்டியபடி, சிறு நாடகம் நடித்தலுக்கும் சம்பாஷணை செய்தலுக்கும் முன்னாக அவற்றை மௌனமாகப் படித்தல்.

3 எழுத்து:— எழுதுகோலைச் சரியாய்ப் பிடிக்கவும், எழுத்துக்களை அட்சரசுத்தியாகவும், வேகமாகவும், எழுதவும் பிள்ளைகளை வற்புறுத்தவேண்டும். படித்த பாடங்களில் கேட்கும் கேள்விகளுக்கு ஒரு வாக்கியமுள்ள சிறுவிடைகள் எழுதும் திறமையை அதிகரிக்கச்செய்தல்.

உபகரணங்கள்:— முதல் வகுப்பில் எழுதியபடியே.

கணிதம் — Mathematics:

1. பத்து முதல் இருபது வரை எண்ணல்; எண்களை இலக்கத்தால் எழுதுதல்.

2. இருபதுக்கும் நூறுக்கும் இடையிலுள்ள எண்கள்; நூறு நூறாக ஆயிரம் வரை எண்ணல்; ஒன்று, பத்து, நூறு ஸ்தானங்களில் எண்மானம் எண்குறிப்புகள்.

3. கூட்டல், கழித்தல் இரண்டிலும் 100 கூட்டுத்தொகை வருவதில் பயிற்சி; கூட்டல் என்று சொல்லும்போது பல எண்களை மேலிருந்து கீழ்வரைக்கும் கூட்டினால் தொகை நூறுக்குள் வருவதாய் இருக்கவேண்டும்.

4. எண்களைப் பத்துப் பத்தாகவும், ஐந்தைந்தாகவும், இரண்டிரண்டாகவும் எண்ணல்; இதைக்கொண்டு 10-ம், 5-ம், 2-ம் பெருக்கல் வாய்ப்பாடுகளை உண்டாக்கல்; வாய்ப்பாடு அவ்வாறு தெரிந்து கொள்ளும்போது, ஒரு எண்ணினுடைய 2 முதல் பத்து மடங்குகளின் தொகை என்னவென்று அறிதல்; கணக்குச் செய்யும்போது மேலே படித்தவைகளை உபயோகிக்கத் தெரிந்து கொள்ளுதல்.

5. ஒரு பொருளின் அரை, கால் பாகங்கள்.

6. நீட்டலளவை--கெஜம், அடி, அங்குலம்.

7. முகத்தலளவை-முத்திரைப்படி, அரைப்படி, கால்படி

8. சாதாரணமாக வழங்கும் இந்திய நாணயம்:— ஒவ்வொரு நாணயத்திற்கும் அதற்குக் கீழ் உள்ள நாணயத்தில் சில்லரை கொடுக்கத் தெரிந்துகொள்ளல். (கீழினமாக்கல்)

செய்யத்தக்க கை வேலைகள்:

1. பொருள்களை மற்றொரு பொருள்களுக்குப் பக்கத்தில் வைத்தோ, அல்லது நூலைப் பொருள்களின் நீள வசமாய்ப் பிடித்துப் பார்த்தோ, பொருள்களின் நீளத்தில் எது குறைவு எது அதிகம் என்று ஒப்பிட்டுப் பார்த்தல்; உதாரணமாக இரண்டு மூங்கில் கம்புகளையும் இரண்டு அறைகளையும் அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தல்.

2. (a) ஒரு பொருளின் நீளம், அகலம், உயரம் முதலியவற்றை முழு ஒன்றுகளால் அளந்து பார்த்தல்: அப்படிப் பார்த்தால் ஒருபெட்டிக்கு எத்தனை அங்குலம்? ஒரு வீட்டுக்கு எத்தனை அடி? ஒரு வயலுக்கு எத்தனை கெஜம்? என்று பார்க்கலாம். அப்படி அளக்கும் போது முழு எண்ணைக எடுத்துக் கொள்ளக் கூடாத ஒன்றின் பாகங்களை விட்டுவிடலாம்.

(b) ஒரு துணி, ஒரு நாடா அல்லது நூல் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு அளவை அளத்தல்.

3. ஒரு கயிறு, ஒரு நீண்டசதுர வடிவமான காகிதம். ஒரு சோப்புத்துண்டு போன்ற பொருள்களை அரை கால் பாகங்களாக வெட்டுதல்.

4. முகத்தலளவைக் கொண்டு தானியம், மணல் முதலிய பொருள்களைப் பிள்ளைகளே அளந்து பார்த்தல்.

இயற்கைப்பாடமும் தோட்டவேலையும். Nature Study & Gardening.

சாதாரண மரங்கள், செடிகள் இவைகளை இன்னின்னவென்று அறிந்து அவைகளின் பெயரை எழுதக் கற்றுக்கொள்ளுதல்; பாடசாலைத் தோட்டத்தை உற்றுப் பார்த்தல் அல்லது ஏதாவதொரு தோட்டத்திற்குப் போய் அதைப் பார்வையிடல்; மரங்களும் செடிகளும் எப்படி வளருகின்றனவென்று உற்றுப் பார்த்தல்; மரத்தையும் அதன் தோற்றத்தையும் உற்றுப் பார்த்தல்; அடிமரம், கிளை, இலை, பழம் முதலியவற்றைக் கவனித்தல்; தோட்டத்திலுள்ள செடிகளைப்பற்றிப் படித்தல்; பாடமாகத் தெரிந்துகொண்ட மரங்களின் புஷ்பங்களை உற்று நோக்குதல்; பயிரிடும் நிலங்கள், பயிரிடப்படாத நிலங்கள் நமது வீட்டில் பிரியமாய் வளர்க்கும் பிராணிகளான நாய், பூனை, பசு, ஆடு இவற்றைப்பற்றியும் அவைகளின் பழக்க வழக்கங்களையும் படித்தல்; காகம், சிட்டுக்குருவி அணில் முதலிய பிராணிகளின் இயற்கைக் குணங்கள் அவைகளின் பழக்க வழக்கங்களையும் கவனித்தல்; தோட்டத்திற்கு வரும் வண்ணாத்திப்பூச்சி அதன் நிறம், அதன் தோற்றம் முதலியவற்றை உற்று நோக்கல்.

செய்யத்தக்க கை வேலை:

தோட்டம் போட உதவி செய்தலும் அதற்குத் தண்ணீர் ஊற்றுதலும்; பயிரிடப்பட்ட நிலங்களுக்கும் பயிரிடாத நிலங்களுக்கும் சென்று பார்த்தல். விதைகள், இலைகள், கூடுகள் இவற்றைச் சேகரித்தல்; உற்றுப்பார்த்த மரங்கள், செடிகள், பழங்கள், பறவைகள் முதலியவற்றின் படங்களை வரைதல்.

பூகோளம்—Geography

(a) சூரியன், சந்திரன், நட்சத்திரம், இரவு பகல்.

(b) வாரத்தின் நாட்கள், மாதங்கள், நான்கு திசைகள்.

(c) குடியிருக்கும் ஸ்தலத்திலுள்ள கோவில், மசூதி, தபலாபீஸ், ரயில்வே ஸ்டேஷன் முதலியன.

(d) அரிசி அல்லது சோளம் போன்ற சாதாரண தானியத்தின் சரித்திரம். (அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி அவ்வவ்விடங்களில் ஜீவித்து வரும் ஜனங்கள், அவர்கள் ஆகாரம், உடை, குடிசை முதலியன.)

(e) பாடசாலை சுற்றுப்புறத்திலும் குடியிருக்கும் ஸ்தலத்திலும் உள்ள மரஞ் செடி கொடிகளின் பெயர் சொல்லுதல். (இயற்கைப்பாடம் சம்பந்தப்பட வேண்டும்) நமக்குத் தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது.

(f) நமக்குச் சிநேகமும் எதிரியுமான, சமீப இடங்களிலுள்ள மிருக ஜீவன்கள்.

(g) குடியிருக்கும் ஸ்தலத்திலுள்ள தொழிலாளிகளும் அவர்கள் தொழிலும்: கொல்லத்துக்காரன், தச்சன் கொல்லன் முதலான தொழிலாளிகள்.

(h) நம் ஆகாரத்திற்கு வேண்டிய பொருள்கள், உடை. ஆகாரம், நாம் இருக்கும் இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருள்கள் அல்லது செய்யக்கூடிய பொருள்கள், முதலியன.

(i) போக்கு வரவு சாதனங்கள் குடியிருக்கும் ஸ்தலத்தில் உபயோகிக்கப்படும் பாதை, வண்டி, மோட்டார்கள், ஆறு வாய்க்கால்களில் செல்லும் படகு முதலியவைகள்.

(j) சமீபத்திலுள்ள மலைகள், ஆறுகள், ஓடைகள், குளங்கள் காடுகள்.

செய்யத்தக்க கை வேலைகள்:

(a) சூரியோதயம், சூரியஸ்தமானம் உற்று நோக்கல், மத்தியானத்தில் சூரியன் இருக்கும் நிலை; பூர்ணச்சந்திரன், சந்திரனின் தோற்ற மாறுபாடுகள்.

(b) பள்ளிக்கூடத்திற்கேற்ற நாள் முதலியவை.

(c) கட்டடங்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று பார்வையிடல்.

(d) அந்தந்தப் பயிர் நிலங்களுக்குச் சென்று பார்த்தல்.

(e) பார்த்த செடிகளையும், இலைகளையும் வரைதல்.

(f) அந்தந்த மிருகங்களின் படங்கள் சேகரித்தல்.

(g) கொல்லன் முதலியோர் இருக்கும் இடங்களுக்குச் சென்றுபார்த்தல்.

(h) கல்விப் பொருட்காக்ஷிக்குப் பொருள் சேர்த்தல்.

(i) படம் சேகரித்தல்.

(j) அவ்வவ்விடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செல்லல்.

சங்கீதம்—Music

முதல் வகுப்பில் கற்ற பத்துப் பாட்டுகளைப்போன்ற மற்ற பத்துப் பாட்டுகளைக் கற்றல்.

இல்லறவேலை—Home Craft.

இரண்டாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்புவரை தையல் வேலை, கைத்தொழிலின் ஒரு பாகமாகச் செய்யப்படவேண்டும். ஒரு ஊசியை எப்படிப் பிடிப்பது? உபாத்தியாயர் வரைந்த ஒரு படத்தின் மேல் நூல் ஓட்டல்; தையல் தைக்கும் துணிகளை எவ்வாறு பிடிப்பது, ஒரு மடிப்புள்ள முரட்டுத் துணியில் வரிசையாகப் பலவித வர்ண நூலில் தையல்; சாயத்துணியில் நூல் ஓட்டுதலும், கம்பளித் தையலும் போடப்பழகுதல்.

பெரிய மடிப்பு மடிக்கப் பழகல். தையல் தைக்க எப்படித் தொடங்குவது, சேர்ப்பது, இணைப்பது என்ற விஷயங்களைக் காட்டி மடிப்பு இணைப்பு ஓரம் தைத்தலைக் கற்றல்; துணிகளை மடித்துப் பை தைக்க நூலோடுதல்.

Syllabus for Third Class.

மூன்றும் வகுப்புப் பாடக் குறிப்புகள்.

தாய்மொழி—First Language:—

1. வாய்மொழி:

(a) ஒரு தனிப்பட்ட சிறு சம்பவத்தைத் திட்டமான தொடக்கம் முடிவுகளுடன் அனுவசியமான விஷயங்களை நீக்கி வரிசைக் கிரமத்தில் சொல்லப் பயிற்சி.

(b) சிறு நாடகங்கள் நடித்தல்.

(c) சாதாரண செய்யுட்களை வாசிக்கவும் அதை மனப் பாடமாகச் சொல்லவும் பழகுதல்; வாய்மொழிப் பாடத்தில் மேற்கூறிய விஷயங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

2. வாசிப்பு:

(a) சுமார் `00 புதிய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளத் தக்கதாக, பாடப்புத்தகங்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நூற்களை வாசித்தல்.

(b) மௌனவாசிப்பு:— இதில் உரக்க வாசிப்பு 40 பாகமாக இருந்தால் மௌன வாசிப்பு 60 பாகம் இருக்கப் பயிற்சி; உரக்க வாசிப்பைக் குறைத்து மௌன வாசிப்பின் வேகம் அதிகரிக்க கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு வாசிக்கப்படும் மௌன வாசிப்பில் ஒரு பந்தியில் (paragraph) உள்ள முக்கிய கருத்தையும், கதைகளிலுள்ள சாராம்சத்தையும் நாளடைவில் தெளிவாய் அறியும்படி பயிற்சி அளித்தல்.

3. எழுத்து:

எழுத்துக்களை அட்சரசுத்தியாகவும், வேகமாகவும் எழுதப் பயிற்சி அளித்தல்; எழுத்துக்களைச் சுத்தமாகவும், வேகமாகவும் எழுதுவதில் எழுத்துக்கள் அழகான உருவமைப்புத் தோன்றக் கவனம் செலுத்த ஆரம்பித்தல். பாடப் புத்தகத்திலிருந்தோ, அல்லது பாடத்திட்டத்தில் கண்ட மற்ற நூற்களிலோ, கேள்விகள் கேட்கும்போது இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடைகள் எழுதப்பயிற்சி.

4. இலக்கணம்:—

(a) மிகச் சாதாரணமான இலக்கணக் குறிப்புகள் தெரியவேண்டும். பெயர்ச்சொல், வினைச்சொல் இவற்றைப் பொறுக்கி எடுத்து அவை ஒருமையா அல்லது பன்மையா என்று அறிந்து கொள்ள அப்பியசித்தல்; முற்றுப்புள்ளி உபயோகம் அறிதல்.

(b) எழுத்துக்களின் அகராதி வரிசையின் அறிவு.

கணிதம் — Mathematics:

1. பத்தாயிரம் வரை எண்மான எண்குறிப்பு.

2. இரண்டு மூன்று ஸ்தான எண்களில் கூட்டல் கழித்தல், மூன்று ஸ்தான எண்களில் ஐந்துபத்து (Column) வரை கூட்டல்.

3. ஒவ்வொரு எண்ணிற்கும் இரண்டு முதல் பத்துவரையுள்ள மடங்குகளைக் காட்டி 3, 4, 6, 7, 8, 9-ம் வாய்ப்பாடுகளைக் கற்றல்.

4. வகுத்தல் செய்யப் பெருக்கல் வாய்ப்பாட்டை உபயோகிக்கத் தெரிதல். ஒரு ஸ்தானம் இரண்டு ஸ்தானம் உள்ள வகுக்கும் எண்களைக் கொண்டு நெடுவகுத்தல் செய்யப்பழகுதல்.

5. $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{3}{4}$ பின்னங்கள்: இப்பின்னங்களில் கூட்டல், கழித்தல் மற்றும் அப்பின்னங்களை 100வரை உள்ள முழு எண்களால் பெருக்குதல்.

6. (a) இந்திய நாணயம்: வழங்கும் இந்திய நாணயங்களில் ஒன்றிற்கொன்று உள்ள சம்பந்தம். இனமாற்றல் சம்பந்தமான சுலபமான கணக்குகள்.

(b) நீட்டலளவை:— சிறு அளவுகளைக் கொண்டு அளத்தல். இம்மூல அளவுகளை மேலினத்திற்கும் கீழினத்திற்கும் மாற்றுதல். இந்த அளவுகளைக் கொண்டு சாமான் வாங்குதல், விற்றல் சம்பந்தப்பட்ட கணக்குகள் போடல்.

(c) முகத்தலளவை:— அந்தந்த ஊர்களில் வழங்கப்படும் முகத்தல் அளவைகளுடன் பட்டணம் முழுப்படி, அரைப்படி, கால்படி ஆழாக்குகளைத் தெரிந்து கொள்ளுதல்; அளக்கப்பட்ட அளவையானது ஏறக்குறைய முழுமூல அளவுக்குச் சொல்லுதல் முகத்தலளவை இனமாற்றல், முகத்தலளவையால் விற்ற பொருள் சம்பந்தமான சிறு கடைக்கணக்குகள்.

(d) நிறுத்தலளவை:- பலம் தோலா போன்ற சிறுநிறுவை மூல அளவுகள் ஒரு நிறுத்தலளவை அதன் கீழினத்தில் சொல்லுதல்; நிறுத்து விற்கும் அல்லது வாங்கும் சாமான்கள் சம்பந்தப்பட்ட சுலபமான கணக்குகள்

செய்யத்தக்க கை வேலை.

(a) i. தேக அளவு எடுத்தல்:— ஒருவர் உயரம், மார்பு, இடுப்பு, புஜம், கழுத்து இவற்றின் அளவைக் கண்டுபிடித்தல்.

ii. பொருட்களின் சுற்றளவு நிலையத்தின் மதில் நீளம் அகலம், சுவர்களின் உயரம், கதவுநிலை முதலியவற்றின் உயரம் கண்டுபிடிக்க அளந்து பார்த்தல்.

(b) i. பலவகை நாணயங்கள் அடங்கிய பையிலிருந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பணத்தொகையை எடுக்கப் பழகுதல்.

ii. விளையாட்டுக் கடை வைத்து வியாபாரம் பண்ணிச் சில்லரை கொடுக்கப் பழகுதல்

(c) i. வீட்டிலுள்ள பாத்திரங்களில் எவ்வளவு தண்ணீர், பால் முதலியன பிடிக்கும் என்று கண்டுபிடித்தல்.

ii. வீட்டிலிருக்கும் தானியம், தண்ணீர் பாத்திரங்களை அளந்து பார்ததல்.

(d) i. வித்து காய்கறி சர்க்கரை போன்ற பொருள்களைப் பலவிதக் கணக்கில் தேவைக்குத் தக்கபடி நிறுத்துக் கொடுத்தல்.

ii. கருப்புக்கட்டி, கோப்பை, தபாலில் அனுப்பும் கடிதம், பார்சல் (Parcel) போன்ற பொருள்களைப் பலம், தோலா என்ற கணக்குகளில் நிறுத்துப் பார்த்தல்.

(e) ஒரு நாடா, ஒரு நீண்ட சதுரக்கடுதாசி, ஒரு நீண்ட சதுரத்துண்டு நிலம் இவற்றை $\frac{1}{8}$, $\frac{3}{4}$ பாகங்களாகக் குறித்துக் காட்டுதல்.

இயற்கைப்பாடமும் தோட்டவேலையும்
Nature Study & Gardening.

தரைப்படம் வரைந்து தோட்டம் போடுதல். நிலத்தைப் பண்படுத்தல், நிலத்தில் காணப்படும் மண்புழு, கறையான் இவற்றை உற்று நோக்குதல். மண்ணைத் தோண்டுதலும் அதை தோண்டுவதின் காரணங்கள் என்ன என்பதும் பாத்தி பிடிப்பதும், முளைப்பதற்கேற்ற வித்துகளை முளைக்கப்போட அல்லது விதைக்க ஏற்றகாலமெது என்பதும் அறிதல். நாற்றுங்கால் தயாரிப்பு. முளைக்கப் போடுதல் அல்லது விதைத்தல் முளை வருவதைக் கவனித்தல். நாற்றுப் பிடுங்கி நடுதல் செடிகளைப் பதியம் போடுதல். களைபிடுங்கி செடிகளைப் பாதுகாக்கச் செய்தல். சில சாதாரணப் பூக்களையும், அவற்றின் பாகங்களையும் பற்றி கற்றல். பூமொட்டுகளின் தோற்றமும் அவற்றின் ஸ்தானமும். சில சாதாரண காய்கனி வகைகள், மரக்கறி வகைகளின் பெயர்களும் இவைகளின் உபயோகமும், கோழி, புறா முதலிய

சாதாரண பட்சிகளை உற்று நோக்குதலும் அவைகளைப்பற்றிய சில விவரங்களைப் படித்தலும், எறும்பு சிலந்திப்பூச்சி போன்ற வற்றைத் தோட்டங்களிலும் வீடுகளிலும் கவனித்தல், தோட்டத்திலுள்ள எலி.

செய்யத்தக்க கை வேலை

தோட்டவேலை:— பாடசாலைப் பொருட்காட்சிசாலைக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்தல். முன்னமே படித்த மரம், பட்சிகள், பூக்கள் இவைக்ளின் உருவங்களைப் படம் வரைதல்.

பூகோளம் — Geography:

(a) சூரியன், சந்திரன், திசைகள், நேரம் (மணி)

(b) கிராமத்தின் எல்லைகளும் மேட்டுப் பிரதேசமும், தாழ்வுப் பிரதேசமும்.

(c) ஓடைகள், ஆறுகள், அவைகள் எப்படி ஓடுகின்றன? ஏன் ஓடுகின்றன? குளங்கள், ஏரிகள்.

(d) பாடசாலைத் தோட்டங்களும், வயல்களும், தோப்புகளும்.

(e) தரிசு நிலம், அங்கு இயற்கையாய் விளையும் தாவர வர்க்கங்கள்.

(f) வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் விதம்; நெல் பயிராகும் தஞ்சாவூர், மலையாளம் போன்ற நீர்ப்பாசன சௌகரியமுள்ள இடங்களில் வசிக்கும் ஜனங்களுடைய வாழ்க்கை விவரம்.

(g) காட்டு மிருகங்கள், பறவைகள், வீட்டு மிருகங்கள், மனிதர்களுக்கு அவைகளால் உண்டாகும் நன்மைகள், காடுகள்.

(h) குடியிருக்கும் இடங்களில் நடந்தேறும் கைத்தொழில்கள், நமது ஆடைகள், பருத்தியின் சரித்திரம், பஞ்சாலைகளின் ஜீவிய வாழ்க்கை, உள்ளூர் வியாபார விஷயங்கள்.

(i) ரஸ்தாக்கள், வழிகாட்டி மரங்கள், கடல், துறைமுகம், தீபஸ்தம்பம் முதலியன.

(j) பொது இடங்களும் அவைகளின் உபயோகங்களும்.

செய்பத்தக்க கை வேலைகள்.

(மேல் கண்ட a, b, c முதலிய பிரிவுகளுடன் சேர்க்க)

(a) பகலில் ஒவ்வொரு மணிநேரத்திலும் நிழல், வெவ்வேறு நீளத்திலும் திசையிலும் விழுவதை உற்று நோக்குதல், பாடசாலையிலிருந்து முக்கிய இடங்களுக்கு வழிகாட்டல், பாடசாலைக் கடிகாரத்தில் மணி பார்த்தல்.

(b) நம் ஊரின் எல்லைப் பக்கத்தில் உள்ள கிராமங்களை பார்வையிட்டு அவைகளின் பெயர், அவைகள் இருக்கும் இடம் அவற்றை உத்தேசமாக ஒரு குறித்த அளவில் ஒரு படம் வரைந்து குறித்தல்.

(c) குடியிருக்கும் ஸ்தலங்களில் காணப்படும் ஓடைகள், ஆறுகள், குளங்கள் முதலியவைகளைப்போய் பார்வையிடல்; அங்கு ஜலம் எப்படித் தேக்கப்பட்டுத் தெளியிடப் படுகிறது என்பதைக் கவனித்தல்.

(d) குடியிருக்கும் ஸ்தலத்தில் காணப்படும் செடிகளின் ஜாபிதா தயாரித்தல, வருடத்தின் எவ்வெக்காலங்களில் அவை காணப்படுகின்றன; அவை புஷ்பிக்கும் காலம், பலன் கொடுக்கும் காலம், இவற்றைக் கவனித்தல்.

(e) செழிப்பான நிலங்களையும் தரிசு நிலங்களையும் வித்தியாசப் படுத்திக் காட்டும் படங்கள்.

(f) தகுதியான படங்களைச் சேகரித்து விஷயங்களைப் படித்தல். அவ்வூர்களிலிருக்கும் குளக்கரைக்குச் சென்று பார்வையிடல்.

(g) விநோதமான மிருகங்களின் படங்களைச் சேகரித்தல்; இவ்விதமாகப் படங்கள் சேகரித்தல.

(h) கூடிய வரையில் தொழிற்சாலைகள், வாரச்சந்தைகள், கடைகள், ரயில்வே, சாமன்கள் இறக்குமதி ஏற்றுமதி இடங்கள் முதலியவற்றைப் பார்வையிட்டு, அவ்வவ்விடங்களில் வெளியேறும் பொருள்களையும் உள்ளே கொண்டுவரும் பொருள்களையும் குறித்துக்கொள்ளல்.

(i) உயிர் பாதுகாவல் முதல் (Safety frist) என்ற சங்கத்தின் படங்களைச் சேகரித்தல், எந்தெந்த திக்குகளில் மோட்டார், பஸ், வண்டி ஓடுகின்றன என்பதைக் குறித்தல்; கடற்கரையடுத்த இடங்களிலுள்ள பிள்ளைகள் தீபஸ்தம்பம், துறைமுகம் முதலியவைகளைப் பார்வையிடுதல் கடலோரத்திலில்லாத ஊர்களிலுள்ள பிள்ளைகளுக்கு அவற்றின் படங்களைக் காண்பித்தல்; கட்டுமரம், படகுகள்.

(j) பொது இடங்களுக்குச் செல்லுதல்.

இந்து தேச சரித்திரம்.

1. இராமாயணம், மகாபாரதக் கதைகள்.
2. ஹரிச்சந்திரன் கதை.
3. சிபிச் சக்கரவர்த்தி கதை.
4. புத்தர் சரித்திரம்.
5. அசோகர் சரித்திரம்.
6. இராணி சம்யுக்தையின் சரித்திரம்.
7. சித்தூர் பத்மினியின் சரித்திரம்.
8. பாபர் சக்கரவர்த்தியும் அவர் மகனினது நோயும்.
9. நூர்ஜஹான் சரித்திரம்.
10. ஸ்தல சரித்திரமும் அதை ஒட்டிய கதைகளும்.

பின் வருபவரைப் போன்றவர்களில் இருவர் சரிதை.

1. சௌந்திர பாண்டியன்.
2. திருமலை நாய்க்கர்.
3. இராணி மங்கம்மாள்.
4. இராஜ இராஜ சோழன்.
5. இராஜேந்திர சோழன்.
6. குலோத்துங்க சோழன்.
7. சேரன் செங்குட்டுவான்.
8. புகழேந்திப் புலவர்.
9. நரசிம்ம வர்மன்.

தேச பரிபாலனம்.

முதல் வகுப்பின் பாடக்குறிப்புகளைக் காண்க.

சங்கீதம்.

இரண்டாம் வகுப்பில் கற்ற பத்துப் பாட்டுகளைக் காட்டிலும் சற்றுக் கடினமான ஏதேனும் பத்துப் பாட்டுகள், சமஎடுப்பில், ஆதிதாளம், ரூபகதாளங்களில் கற்கவேண்டும்.

இல்லறவேலை.

துணிகளை ஒன்று சேர்த்து இணைத்தல் முதலியவற்றைக் காட்டி மடிப்புத் தையல் என்றவைகளைக் காட்டி துணிகளை ஒன்றோடு ஒன்று இணைத்துத் தைத்தல்; ஒடுக்கமான ஓரம் தைத்தல்; பின் தையல், தலையணை உறை அல்லது பைகள் தைக்கப் பழகுதல்; அளவு எடுக்கப் பழகுதல்; கடுதாசியில் குழந்தைகளின் சாதாரண உடுப்புகளை அளவு எடுக்கவும் வெட்டவும் பழகுதல். ஒரு குழந்தை அல்லது பொம்மை உடுப்பை வெட்டித் தைக்கப் பழகுதல்; பூவேலை ஊசியும், சாதாரண பூவேலைகளின் உபயோகம்.

Syllabus for Fourth Class.

நான்காம் வகுப்புப் பாடக் குறிப்புகள்.

$8\frac{1}{2}$ வயது முதல் $9\frac{1}{2}$ வயது வரை.

தாய்மொழி:— ஒரு கதை அல்லது ஒரு சம்பவத்தைக் குறித்து வியாசம் எழுதுவதற்குமுன் அதன் விவரங்களை வாய்மொழியாக ஒழுங்குப் படுத்தல்.

2. எழுத்து:— சாதாரணக் கடிதங்கள் அல்லது மற்ற சமூகத்தாருக்கு எழுதும் கடிதங்கள் மூலமாய்த் திட்டமான வியாசம் எழுத ஆரம்பித்தல்; கூடுமானால் அவ்வியாசத்தில் வருடத்தின் பிற்பாதியில் சொந்த அநுபவங்களை எட்டிய வியாசங்களைச் சுருக்கமாய் எழுதுதல்.

3. வாசிப்பு:— (a) சொற்கள் அதிகப்படவும் கொள்கைகள் மிகையாகவும் அதிகம் வாசிக்க வேண்டும்.

(b) நூல் நிலையத்திலுள்ள புத்தகங்களை மௌனமாய் வேகத்துடன் வாசித்து அதன் விஷயங்களைக் கிரகிக்கத்தக்கப் பயிற்சி கொடுத்தல்; இவ்வருடம் சத்தமின்றி உதடு அசைவது தெரியாமல் மௌனமாய் வாசிக்கப் பிள்ளைகளைப் பழக்குவிப்பதே முக்கிய நோக்கமாய் இருக்க வேண்டும்.

வாசகப் புத்தகத்திலுள்ள பகுதியும், நன்றாகத் தெரிந்தெடுத்த சுலபமான செய்யுட்பகுதியும், பொதுவான வார்த்தைகளை அறிந்து கொள்ளும் ஞானத்திற்கும், பாடத்திட்டத்தில் உள்ள இதர பாடங்களுக்கு அனுசரணையான வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளுவதற்கும் ஏற்றதாக இருக்கவேண்டும்.

இவ்வகுப்பில் சுமார் 700 புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

இலக்கணம்:— எழுவாயுடன் வினைச்சொல் பொருந்த முற நிற்றல், காலங்களின் சரியான உபயோகம், மூன்று காலங்கள், மற்ற சொற்களைத் தெரிந்து கொள்ளல், எண் ஆகிய இலக்கணத்தில் முக்கிய அம்சங்களைக் கற்றல். கால் புள்ளி மேற்கோள் காட்டும் புள்ளி (inverted commas) இவைகளின் உபயோகம் அறிதல்.

கணிதம் — Arithmetic.

1. லட்சம் வரை எண்மானம், எண்குறிப்பு.

2. மூன்று ஸ்தானமுள்ள 8 பந்தி எண்களைக் கூட்டல். நாலு ஸ்தானமுள்ள எண்ணிலிருந்து மூன்றுஸ்தான எண்களைக் கழித்தல். 11, 12, 16ம் வாய்ப்பாடுகள்.

3. 2 முதல் 4 வரை உள்ள ஸ்தான எண்களை 2, 3ஸ்தான எண்களால் பெருக்கல்.

4. ஐந்து ஸ்தான எண்களை 2, 3, ஸ்தான எண்களை வகுத்தல்.

5. (a) நிலங்களையும் ரஸ்தாக்களையும் அளவு பார்த்தல் மெவினிய மூல அளவுகள், வயல்களின் நீளத்தை அளக்க சங்கிலியும், லிங்க்சும், தூரத்தின் மூல அளவுகளை அறிய மைலும், பர்லாங்கும்; ஒரு கெஜமானது மைல், பர்லாங், சங்கிலியுடன் எவ்வாறு சம்பந்தப்பட்ட நான்கு விதிகளை ஒட்டிய கணக்குகள்.

(b) இந்திய நாணயம்:— இந்திய நாணயங்களைப் பற்றிய நாலு விதிகளை ஒட்டிய கணக்குகள், கணக்கு விடைகளைச் சரி பார்த்தல்.

(c) முகத்தலளவை:— பட்டணம் படிகளைக் காட்டிலும் பெரிய மூல அளவைகள் (கலம், மரக்கால், முதலியன) ஆகை

கள் பட்டணப்படிக்கு எத்தனைபங்குப் பெரியது அல்லது சிறியது என்று கணக்கிடல்; நாலு விதிகளையும் ஒட்டி முகத்தலளவை கணக்குகள்.

(d) நிறுத்தலளவை:— உபயோகத்திலிருந்து வரும் இலகுவானதும், கனமானதுமான நிறைகள், அவைகளில் ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தம், நான்கு விதிகளை ஒட்டிய கணக்குகள்.

(e) கால அளவை:— நாளும் வருஷமும் ஆகிய மூலஅளவைகள்; இந்திய இங்கிலீஷ் முறைப்படி அதற்குக் கீழ்ப்பட்ட மணி, நிமிஷம், நாழிகை முதலிய அளவுகள்; இங்கிலீஷ் மாதங்களுக்கு நாட்கள் எத்தனை என்று படித்தல்; கால அளவைச் சம்பந்தப்பட்ட நான்கு விதிகளை ஒட்டிய கணக்குகள்.

6 பின்னக் கணக்குகள்:— ½, ¼, ¾, ⅛, வீசம் இவைகளை ஒட்டிக் கூட்டல், கழித்தல் கணக்குகள், முழு எண்களால் பின்னங்களைப் பெருக்கல், தினசரி வாழ்க்கைக்கு ஒட்டி பின்னங்களை உபயோகிக்கும் கணக்குகள்.

7 சதுரத்தையும் நீண்ட சதுரத்தையும் பற்றிய அறிவு, எடுத்துக்கொண்ட அளவுகளினால் பரப்புகளை அளந்து சொல்லுதல்.

8. கூட்டுறவு வியாபாரக் கணக்குகள், குடும்ப வரவு செலவுத் திட்டம், சொத்துக்களை கிரயத்துக்கு வாங்குதல், விவசாயம் செய்யப் பிடித்த செலவு, விளைவு, இவைகளை ஒட்டிய கணக்குகள்.

செய்யத்தக்க கை வேலைகள்.

1. (i) பந்தய ஓட்டத்திற்கு (ஒருவேளை நூறு கெஜ தூரத்திற்கு) ஒரு பாதை போடல்.

(ii) அட்டையால் அங்குல ஆறு அளவுள்ள அடிக்கோல் தயார் செய்து, அதில் ஒரு அங்குலம், அரை அங்குலம் கால் அங்குலம் முதலியவைகளைக் குறிப்பிடுதல்.

(iii) பார்த்த பார்வையில் ஒரு நீளத்தை இத்தனை அடி என்று சொல்லிப் பின்பு அடிக்கோலால் அளந்து சரியா என்று பார்த்தல்.

2. (i) பட்டணம் படியைக் காட்டிலும் பெரிய அளவு களில் ஒரு குவியலிலுள்ள தானியங்களை அளத்தல்.

(ii) கால்படி, அரைப்படி, ஒருபடி, இரண்டுபடி அளவுகள் பிடிக்க ஒரு பாத்திரத்தில் குறித்துக் காட்டல்.

(iii) ஒரு சிறு குவியலிலுள்ள தானியம் ஒரு கோப்பை, ஒரு புட்டி, அல்லது ஒரு சட்டியில் உள்ள ஜலபதார்த்தம் இவ்வளவு என்று கண்மதிப்பில் சொல்லி அதையே பின்பு அளந்து சரி பார்த்தல்.

3. (i) பலவிதமான நிறுத்தல் அளவுகளால் தேவையான பொருட்களை நிறுத்தெடுத்தல்.

(ii) கையில் தூக்கி எடுக்கக்கூடிய சாமான்களை இவ்வளவு தோலா, பலம் என்று கை நிதானத்தில் சொல்லிவிட்டு சொன்ன அளவு சரியா என்று பார்த்தல்.

4. ரயில்வே கால அட்டவணையைப் பார்த்து, தூரத்தி லுள்ள இரு இடங்களுக்குச் சென்று வரும் ரயில் வண்டிகளில் மிகத்துரிதமாகச் செல்லும் வண்டியைக் கண்டுபிடித்தல்.

5. நீண்ட சதுரத்துண்டு கடுதாசியிலாவது ஒரு துண்டு நிலத்திலாயினும், அல்லது கனவடிவமான உள்ள பொருளிலா யினும் படித்த பின்னங்களின் பாகங்களைக் குறித்தல்.

6. ஒரு காகிதத்தால் சதுர அங்குலத் துண்டுகள் பல கத்தரித்து, அவைகளைக் கொண்டு பெரிய சதுரங்களும் நீண்ட சதுரங்களும் அமைத்தல்.

இயற்கைப் பொருள் பாடமும் தோட்ட வேலையும்.
Nature Study & Gardening.

தரைப்படம் வரைந்து தோட்டம் போடுதல், நிலத்தைப் பண்படுத்தல், பாத்தி பிடித்துப் பாதை போடல், தோட்டத் தில் என்ன பயிர் செய்வது என்று தெரிந்தெடுத்தல், செடி போடுதல், பயிரிடுதல், நாற்றுப்பிடுங்கி நடுதல், செடிகளை வெட்டி, பதியம் போட்டு வர்க்க விர்த்தி செய்தல், உரங்களும் உரம் போடுதலும்; நிலத்தின் தன்மையைப்பற்றிய ஆரம்ப அறிவு; மரஞ்செடி கொடிகளுக்கு நிலம் ஒரு ஆகாரப் பண்ட சாலை எனத்தெரிந்து கொள்ளுதல்; ஸ்தலத்தில் காணப்படும்

சாதாரண காய்கறிகள் உண்டாவதைப் பற்றிப் படித்தல்; ரோஜா அலரி போன்ற புஷ்பச் செடிவகைகளை இன்னதென்று அறிந்து அதன் பெயரைச் சொல்லப் பழகுதல்; சுற்றுப்புறத்தில் காணப்படும் மூலிகைகளும், கீரைகளும், அவற்றின் உபயோகமும்; விதைகள் பரவுதல், சில சாதாரணப் பூச்சிகளின் தோற்றமும். அதன் பழக்க வழக்கங்களையும் கவனித்துப் பார்த்தல்.

செய்யத்தக்க கைவேலைகள்:

தோட்டவேலை, பாடசாலைப் பொருட்காட்சிசாலைக்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்தல் பார்வையிட்ட பொருட்களைப் படம் வரைதல், தோட்டவேலைக் குறிப்புப் புத்தகம் ஒன்று வைத்திருத்தல்.

பூகோளம்—Geography:

(a) எட்டு முக்கிய திசைகள்- வெயில்காலம், மழைகாலம், மேக மந்தாரமாய் இருக்கும் காலம்—பருவகாலங்கள்.

(b) ஆகாயம், காற்று, தண்ணீர், நீராவியாக மாறுதல், மழை அதன் தொழில்.

(c) கடல் பிரயாணம்.

(d) கிராமமும் பட்டணமும் பட்டணங்கள் எப்படி, எங்கே அமைகின்றன; ஜனங்களின் ஜீவியவாழ்க்கையில் வித்தியாசங்கள்.

(e) ஸ்தலத்தில் விளையும் பயிர் வகைகள்.

(f) போக்குவரவு சாதனங்கள், சந்தைகூடும் இடங்கள், தொழிற்சாலைகள்.

(g) தாலூகா, ஜில்லா, இவற்றின் இயற்கை அமைப்பு, எல்லைகள், விளைபொருள்கள், கைத்தொழில்கள்,

(h) முக்கிய பட்டணங்களும் அங்கு நடைபெறும்தொழில்களும், போக்குவரவு சாதனங்களும், வியாபாரமும்.

(i) சீதோஷ்ணத்தையும், அவை தாவரத்தின் மேலும், மனித வர்க்கத்தின் மேலும் நடப்பிக்கும் செயல்களைப்பற்றிய பொது அறிவு தரும் போதனைகள்.

செய்பத்தக்க கை வேலைகள்.

(மேலே எழுதிய a, b, c, முதலியவைகளுடன் சேர்க்க.)

(a) வித்தியாசமான காலங்களைக் காட்டும் படம் வரைதல்.

(b) காட்டுக்கோழி (wind vane) நேரே செய்து பார்த்தல், மழை பெய்த பிறகு உழவைச் செய்தல்.

(c) படங்கள் சேகரித்தல்.

(d) பிள்ளைகள் நாட்டுவாசம் நகரவாசங்களைப்பற்றிச் சம்பாஷித்தல்.

(e) அந்தந்த மாதங்களில் பயிராகும் விளைபொருள்களைக் காட்டும் ஜாபிதா தயாரித்தல்.

(f) உல்லாசப் பிரயாணம் போதல்.

(g) படம் பார்த்துப் படித்தல்; படத்தில் உள்ள ஸ்கேல் (scale) அளவு அறிதல். தேசப்படங்களில், கடலுக்கு நீலமும், தேசங்களுக்கு வேறு வர்ணங்களும் கொடுத்திருப்பதைப்பற்றிய விவரங்களைக் கற்றல்.

(h) தேசப்படம் வரைதல் ஜில்லாவைக் குறிக்கும் படம் களிமண்ணால் செய்து, அதில் தாலூகாக்கள், ஆறுகள், ரயில் பாதைகள முதலியவைகளைக் காட்டிக் கூடுமானால் வர்ணமும் அதற்கேற்றபடியிடுதல்.

இந்து தேச சரித்திரம் — Indian History.

1. நமது தேசம்.
2. அலெக்ஸாண்டரும், புருஷோத்தமனும்.
3. அசோக மகாராஜன்.
4. கி. மு. கி. பி. என்பது என்னென்று விளக்கிக் காட்டல்.
5. குப்தர்களின் பொற்காலம், விக்கிரமாதித்தியர், நவரத்தினங்கள்: இவைகளைப்பற்றிய அறிவு.
6. ஹர்ஷவர்த்தனரும் அவரது இராஜ்யமும்.
7. முகமது நபி சரித்திரம்.
8. பல்லவர்களும் மகாபலிபுர வரலாறும்.
9. இராஜபுத்திரர்களும் அவர்கள் குணாதிசயங்களும்.
10. மகமதிய படையெடுப்பு.

11. கிருஷ்ண தேவராயர்.
12. அக்பர்.
13. ஷாஜஹானும் தாஜ்மஹாலும்.
14. ராபர்ட் கிளைவ்.
15. விக்டோரியா மகாராணி.
19. ஸ்தலசரித்திர சம்பந்தமான முக்கிய விஷயங்கள்.

தேசபரிபாலனம்—Civics

நம் பாடசாலை சகாக்கள் ஆசிரியர் மற்றவர்கள் உள்பட நம் அக்கம் பக்கத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகள். வீட்டிலும் பாடசாலையிலும், விளையாடுமிடத்திலும், மற்றுமுள்ள இடங்களிலும் சுத்தமாய் வைத்தல். சுகாதாரவிதிகளை அனுசரிப்பதின் முக்கியம். சுத்த ஆகாரம், சுத்த ஆகாயம்; தேக அப்பியாசம், ஓய்வு இவற்றின் அவசியத்தை வற்புறுத்தல்; தொத்து வியாதிகளும், அவற்றைத் தடுக்கும் வழிகளும், தினசரி சுகவாழ்வு.

கிராமம்—அதின் நிர்வாகக் குறிப்புகள் கிராம அதிகாரிகள் பஞ்சாயத்து கூட்டுறவு சங்கங்கள் போன்ற கிராமஸ்தாபனங்கள் அவைகள் கிராமத்திற்குச் செய்யும் நன்மைகள்.

கிராமத்திற்கும் பட்டணத்திற்குமுள்ள வித்தியாசம்: பட்டணத்திலும், கிராமத்திலும் பொதுக் காரியங்களை நடத்தப்படும் வழிகள்.

சென்னை இராஜதானி:— ஜில்லா அதிகாரிகள்; பெரிய பட்டணங்களுக்கு நகரபரிபாலன சபைகள்; அவைகளின் கடமைகளும், தலவரி; ஒருபோஸ்ட்கார்டுசெய்யும் பிரயாணம், ரயில்வண்டி பிரயாணம்.

*குறியிட்டுள்ள இவ்விரண்டிற்கும் பிராஜெக்ட்டுக்கும் ஏற்றவை. ரயில்வே ஸ்டேஷனும், போஸ்ட் ஆபீசும் பக்கத்திலிருந்தால் பிள்ளைகளை அங்கு அழைத்துச் செல்லுவதுடன், பிள்ளைகளை சுயநோக்கமுயற்சிகளாக அவைகளை எடுத்து நடத்துதல் நலம்.

ரஸ்தாவில் போக்குவரவுகளுக்கேற்ற ஆரம்பப் பாடங்கள். முதல் பாதுகாப்பு (Safety First) விளையாட்டு.

1. கால்நடைக்கென்று ரஸ்தாவில் போடப்பட்டிருக்கும் பாதையில் இடதுபுறமாக நடத்தல்.

2. கால்நடைப் பாதை இல்லாத இடங்களில் ரஸ்தாவின் கடைசி ஓரமாக நடத்தல்.

3. ரஸ்தாவின் நடுவில் நின்று ஊர்க்கதைகளைப் பேசிக் கொண்டிருப்பவர்களை விலக்கல.

4. ரஸ்தாக்களையும் கால்நடைப் பாதைகளையும் சுத்தமாக வைத்தல். அதோடு பாதைகளில் கிடக்கும் பழத்தோல், உடைந்த கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலானவைகளை எடுத்து விலக்கல்.

5. வீதிகளிலும், நடைபாதைகளிலும் விளையாடுவதை விலக்கல்.

6. ரஸ்தாவின் குறுக்கே நடந்து போகையில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஜாக்கிரதை.

7. பொதுஜனங்களை ஏற்றிச்செல்லும் வண்டிகளில் ஏறும் போதும் இறங்கும் போதும் செய்யவேண்டிய முறை.

சங்கீதம்—Music.

மாயா மாளவ கௌள இராகத்தில் சரளி வரிசைகள். மூன்றும் வகுப்பில் படித்ததுபோலவே இன்னும் 10 பாட்டுகள்.

இல்லறவேலை—Home Work.

சாதாரணமாகப் பிள்ளைகள் போடும் சட்டைகளையோ, தலையணையுறையையோ வெட்டித் தங்களுக்குத் தெரிந்த எல்லா விதமான தையல்களினாலும் தைத்தல், மடித்த ஓரங்களில் பொத்தான் துவாரம் தைத்தல், கிழிந்த துணிகளில் இழை ஒட்டு (darning) வதற்கான முக்யவிதிகள், கழுத்தைச் சுற்றும் கம்பளித் துணியோ, அல்லது பையோ ஊசியால் பின்னல்வேலை செய்தல். (knitting)

Syllabus for Fifth Class.

ஐந்தாம் வகுப்புப் பாடக் குறிப்புகள்.

9½ வயது முதல் 10½ வயது வரை.

தாய்மொழி—First Language:

வாசிப்பு:— மௌன வாசிப்பு:— (a) நான்காம் வகுப்பின் அப்பியாசத்தைக் காட்டிலும் சற்று அதிகமாக, உதடு அசைவதென்பது கொஞ்சமுமில்லாமல், சிறு சத்தமும் வெளிக்காட்டாமல் பெரியவர்களைப்போலவே வாசிக்கப் பழகுதல்.

(b) இந்த வகுப்பு வருவதற்குள் பிள்ளைகள் புஸ்தகங்களை வாசிப்பதற்கு அதிக ஆவல் கொள்ளத்தக்கதாக, போதுமான புஸ்தகங்களை வாசித்திருக்கலாம்.

நல்ல வசன நடை செய்யுள்களைப் படித்தல்.

(a) 800 புதிய வார்த்தைகளை அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும்.

(b) உயரிய நூற்களை வாசித்தறிய வேண்டும்.

எழுத்து:— சமூக சம்பந்தப்பட்டதும், தொழில் மற்றும் அலுவல்கள் சம்பந்தப்பட்டதுமான கடிதங்களை விரிவாக எழுதப் பழகுதல்.

வருஷத்தின் பிற்பகுதியில், சாதாரண விஷயங்களைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்திச் சிறு சிறு வியாசங்களை எழுதத் தெரிதல். பந்தி அமைப்பை அறிதல்.

இலக்கணம்:— பிள்ளைகள் தாங்கள் எழுதும் வியாசங்களையும், பேசும் பேச்சுக்களையும் தாங்களே திருத்திக் கொள்ளத் தக்கதாக பிரதம இலக்கணங்களையும், முக்கிய அம்சங்களையும் அறிதல்; நிறுத்துக் குறிகள்.

கணிதம்—Mathematics.

1. பத்து மடங்கு ஸ்தான வரிசையில் (ten scale) எண்மானம் எண்குறிப்பு; லட்சத்துக்கும் கோடிக்கும் இருக்கும் சம்பந்தம்.

2. முழு எண்களைக் கொண்டு கணிதத்தின் நான்கு விதிகளையும் ஒட்டிக்கணக்குப் போடுதல்; நன்ருய்த் தெரிந்த காரண எண்களும் சாதாரண மடங்குகளும் கண்டுபிடித்தல்.

3. பின்னங்களின் அறிவும், அவற்றின் எண்குறிப்பும்; $\frac{1}{8}$, $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, $\frac{5}{8}$, $\frac{7}{8}$, $\frac{3}{8}$, $\frac{1}{3}$, $\frac{1}{6}$, $\frac{2}{3}$ இப்பேர்ப்பட்ட சாதாரண பின்னங்களினுல் கூட்டல், கழித்தல் கணக்குகள். இந்தப் பின்ன எண்களை முழு எண்களைக்கொண்டு பெருக்குதல்; இந்தப்பின்ன எண்கள் சம்பந்தப்பட்ட அனுபவத்திற்கடுத்த கணக்குகள்.

4. வழங்கும் நாணயம். நிறுத்தலளவை, முகத்தலளவைகளில் கணக்குச் செய்தல்.

5. சராசரிக் கணக்கின் அறிவும், அவற்றைச் செய்வதின் வழியும் கற்றல்.

6. ஒன்றைச் சார்ந்த முறையில் (unitary method) நேர் வீதாசாரக் கணக்குகள் (direct proportion) பொருள்களைச் சந்தையில் விற்பனை செய்தல்; பொருள்களை விலைக்கு வாங்கல்; விற்றல், சம்பாத்தியவரி, நிலத்தீர்வை, இவைகள் சம்பந்தப்பட்ட கணக்குகள்.

7. சதவீதம், (percent) என்பதின் அர்த்தமும் அதன் உபயோகமும், 5, 10, 20, 25, $33\frac{1}{3}$-ம், 40, 50, $66\frac{2}{3}$-ம், 75, 80, 90, $12\frac{1}{2}$-ம் என்ற சதவீதங்களைக் கொண்டு கணக்குகளைச் செய்தல்; தரகு, லாபம் இவைகளைச் செய்யும்போது வரும் சதவீதங்களை ஒட்டிய கணக்குகள்.

8. சாதாரணவட்டி:— (i) ரூபாய்க்கு வருஷத்துக்கு அல்லது மாதத்திற்கு இவ்வளவு வட்டி வீதம் சொற்பக் காலத்திற்கு, சொற்ப அசல் தொகைக்கு வட்டிக்கணக்குப் போடுதல்.

(ii) ஒரு பிராமிசரி நோட்டில் (promissory note) கண்டபடி வாங்கிய அசலுக்கு வட்டியும் தொகையும் கண்டுபிடித்தல்.

(iii) உண்டி முறைப்பிரகாரம் பாங்கியில் போடப்பட்ட தொகைக்கு வட்டி கண்டுபிடித்தல்.

9. ஊரின் பரப்பளவை, அவ்வக்கிராம அளவைகளின்படி அளத்தல், பரப்பளவுக்கு உபயோகிக்கும் ஏக்கர், செண்டு இவை களைப்பற்றிய அறிவு.

செய்யத்தக்க கை வேலைகள்.

1. (i) தோட்டங்கள், வயல்கள் இவற்றின் சுற்றளவையும் நீள அகலத்தையும் லிங்குகளினால் அளத்தல்.

(ii) ஒரு இடத்தின் நீள அகலத்தை உத்தேசமாக இத்தனை அடி என்று சொல்லிப் பின்பு அளந்து சரி பார்த்தல்.

(iii) ஒரு காலடி வைத்தால் அதன் நீளம் இவ்வளவு என்று கண்டுபிடித்தல்; பின்பு வீட்டுக்கான காலி நிலம், சந்துகள், வயல்கள் இவற்றின் நீளத்தைக் காலடிகளில் அளந்து பார்த்தல்.

2. (i) பலவிதத் தானியக் குவியல்களில் இருக்கும் தானியத்தை அந்தந்த ஊர்ப்படிகளிலும் பட்டணம் படிகளிலும் உத்தேசமாக இவ்வளவு இருக்கும் என்று சொல்லி, பின்பு அதன் அளவைச் சரிபார்த்தல்.

(ii) கூடைகள், ஜாடிகள், குழாய்கள் முதலியவற்றிலுள்ள பொருட்களை உத்தேசமாக இவ்வளவு என்று சொல்லிப் பின்பு அதன் அளவைச் சரிபார்த்தல்.

3. (i) பிள்ளைகள் தங்கள் நிறையைக் கண்டுபிடித்தல்.

(ii) சிறு சிறு பொட்டலங்களைப் பிள்ளைகள் கையில் தூக்கிப்பார்த்து, அதன் நிறையை உத்தேசமாகச் சொல்லிப் பின்பு நிறுத்துச் சரிபார்த்தல்.

4. பாடசாலைத் தோட்டத்தில் செடிகள் நட்டுவதற்கான சமமான இடத்தில் வட்டமும், நீண்ட சதுரமுமான பாத்தி கட்டல்.

5. (i) ஒரு ஏக்கர், ஒரு செண்டு நிலத்தைக் குறித்தல்.

(ii) நாலு ஏக்கர், பத்து ஏக்கர் நிலங்களைக் கண் மதிப்பில் தெரிந்து கொள்ளுதல்.

தோட்டவேலையும் இயற்கைப் பொருள் பாடமும்.
Nature Study & Gardening:

தோட்டம் போடுவதற்கான தரைப்படம் தயாரித்துத் தோட்டம் போடுதல்; பாத்திகள் பிடித்தல்; நிலத்தைப் பண்

படுத்தி, செடிகள் நட்டுப் பயிர் செய்தல்; வீட்டிலே தோட்டம் போட்டு அதை எப்படிப் பயிர் செய்வது, ஒட்டுச் செடிகளைப் பற்றிச் செய்கையின் மூலம் அறிதல்; அந்தந்தப் பருவங்களுக் கேற்றபடி பயிர்கள் விளையும் அவ்வவ்விடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்து பார்வையிடல்; எண்ணெய் வித்துக்கள் சில வற்றைப்பற்றி ஆராய்தல்; மீன்கள், விஷமுள்ள பாம்பு விஷ மில்லாதபாம்பு முதலியவைகளைத் தெரிந்துகொள்ளுதல்; காலத் துக்குக் காலம் தோட்ட நிலங்களில் ஏற்படும் மாறுதல்கள்.

செய்யத்தக்க கை வேலைகள்.

தோட்டத்திலே வேலை செய்தல்; தோட்டக் குறிப்புப் புஸ்தகம் ஒவ்வொரு பையனும் பிள்ளையும் வைத்து எழுதுதல்; பாடசாலைப் பொருட்காட்சிசாலைக்கு வேண்டிய மாதிரிப் பொருட்களைச் சேகரித்தல், அவ்வவ்விடங்களில் விளையும் பயிர் பச்சைகளைப் பார்வையிடப் பிள்ளைகளை உல்லாசப் பிரயாணத் திற்கு அழைத்துச் செல்லல்.

பூகோளம்—Geography:

(a) இராஜதானி:— எல்லைகள், பிரிவுகள், பிரதேசங்கள்

(b) ஜனங்கள்:- ஜாதிகள் பாஷைகள் அவற்றின் பிரிவுகள்.

(c) முக்கிய ஆறுகள்:— கோதாவரி, கிருஷ்ணா, வட பெண்ணையாறு, தென்பெண்ணையாறு, பாலாறு, காவேரி, வைகை, தாம்பிரபரணி. பருவக்காற்றுகள்: தென்மேற்கு, வட கிழக்குப் பருவக்காற்றுகள், எந்தெந்த மாதங்களில் எந்தெந்தத் திசைகளை நோக்கி வீசுகின்றன. மேற்குக்கரைகளிலும் கிழக்குக் கரைகளிலும் அக்காற்றுகளால் உண்டாகும் காரியங்கள்; பருவ காலங்களும் அவற்றின் தன்மைகளும்.

(d) விளைபொருள்கள்:— நெல், கரும்பு, சோளம், தினை, கம்பு; கேழ்வரகு போன்ற தானியங்கள், மக்காச்சோளம், பருத்தி, புகையிலை, காப்பி, தேயிலை, லவங்கம், பட்டைகிராம்பு போன்ற வாசனைப் பொருள்கள்; தேங்காய், நிலக்கடலை உலோக வர்க்கங்கள் முதலியவற்றைப் படித்தல்.

(e) வியாபாரம்:— ஏற்றுமதி, இறக்குமதி;— கால்வாய்கள் ரஸ்தாக்கள், புகைவண்டிகள், படகுகள், கப்பல்கள் முதலியன; ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு எவ்வாறு அனுகூலமாய் இருக்கின்றன.

(f) ஜனத்தொகை:— ஜாதிகளும், ஜில்லாக்களும், அதன் அதன் முக்கிய பட்டணங்களும். முக்கிய சுதேச சமஸ்தானங்கள் ஐதராபாத்து, மைசூர், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை; ஜமீன்கள்.

(g) இந்தியாவின் பொது விவரம்:— எல்லைகளும் இயற்கை அமைப்புகளும், இராஜாங்கப் பிரிவுகளும்.

(h) பிரயாணங்கள்:— சென்னையிலிருந்து கல்கத்தா, திருவனந்தபுரம், இராமேஸ்வரம், மங்களூர், பம்பாய், டில்லி, காசி முதலிய இடங்களுக்குப் பிரயாண மார்க்கம்.

(i) ஏற்றுமதி இறக்குமதி:— பருத்தி, தோல், நிலக்கடலை கொப்பரைத் தேங்காய் முதலிய ஏற்றுமதிகள்; மண்ணெண்ணெய், துணிகள், மோட்டார் போன்ற பல பொருள்களின் இறக்குமதிகளைப் படித்தல்.

(j) முக்கிய துறைமுகங்கள்:— பம்பாய், கராச்சி, கொச்சி, தூத்துக்குடி, சென்னை, விசாகபட்டணம், கல்கத்தா.

(k) கப்பல் மார்க்கம்:— இங்கிலாந்து, ஆப்பிக்கா, பர்மா, மலேயா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குக் கப்பல மார்க்கம்.

(l) பூமி:— பூமி உருண்டை, சமசீதோஷ்ண மண்டலம், உஷ்ணமண்டலம், சீதளமண்டலம்:— இம்மண்டலங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு ஏற்படும் சீதோஷ்ண நிலைமையின் தன்மை.

செய்யத்தக்க கைவேலைகள்.

(மேலே எழுதிய a, b, c, ... முதலியவைகளுடன் சேர்க்க)

(a) கூடுமானால் பள்ளிக்கூடத்தையடுத்த தரையில் ஒரு ரிலீவ (relief) படம் போட்டு அதில் ஆறுகள், ஜில்லாக்கள், ரெயில்வே இலைன்களைக் குறிக்கவும்.

(b) மழையின் அளவைக் காட்டும் படம்.

(c) விளைபொருள்களை விளக்கப் படங்களும் பாடவிளக்க அட்டைகளும். (charts)

(d) வியாபாரத்தை விளக்கிக் காட்டும் அட்டைகளும், அட்டவணைகளும்.

(e) இராஜாங்கமுறை. சரித்திரம் இரண்டுக்கும் ஒன்றுக் கொன்று சம்பந்தமான பாடங்கள்.

(f) கூடுமானால் பள்ளிக்கூடத் தரையில் களிமண்ணிலோ அல்லது காகிதக்கூழினால் பலகைமேலோ இந்தியாவைப்போல் படம் உண்டு பண்ணல்.

(g) பிரயாண மார்க்கங்களைக் காட்டும் படம்.

(h) ஏற்றுமதி இறக்குமதிக்குச் சம்பந்தமான பாடவிளக்க அட்டைகளும், அட்டவணைகளும்.

சரித்திரம்—History.

1 திராவிடர்கள், ஆரியர்கள், வேதகாலம்.
2 புத்தமதம் பரவியது.
3 கிரேக்கர் படையெடுப்பும், அதனால் ஏற்பட்ட விளைவும்.
4 சந்திரகுப்த மௌரியரும், சாணக்கியனும்.
5 மௌரிய ராஜ்யமும், ஆட்சிமுறையும் சாஸனங்களும்.
6 பல்லவர்கள், சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் இவர்களுடைய பராக்கிரமம்.
7 சந்திரகுப்தர்.
8 மகமதிய படையெடுப்பு, கஜினி முகமதும், கோரிமுகமதும்
9 மூன்று மதாச்சாரியர்கள்.
10 விஜயநகர ராஜ்யம்.
11 மொகலாய ராஜ்யத்தின் உன்னத நிலையும், அதன் வீழ்ச்சியும்: பாபர், அக்பர், ஔரங்கசிப்.
12 ஆரம்பத்தில் இந்தியாவில் குடியேறின ஐரோப்பியர்கள்.
13 மகாராஷ்டிரர்களும் சிவாஜியும்.
14 இராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத்தின் ஆரம்பம்.
15 ஹைதர் அலியும் திப்புசுல்தானும்.
16 வெல்லெஸ்லி பிரபு.

17 வில்லியம் பெண்டிக் பிரபும், ராஜாராம் மோஹன் ராயும்.

18 விக்டோரிய மகாராணியாரின் பிரகடனம்; ராஜப்பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட சமூக ராஜீய சீர்திருத்தங்கள்; ரிப்பன் பிரபு, கர்ஸன் பிரபு, மின்டோ பிரபு, இவர்களுக்குப்பின் வந்தவர்கள்.

தேசபரிபாலனம்—Civics:

மானிட தேகத்தின் பற்பல அரிய விஷயங்கள்:— அவைகளின் முக்கிய தொழில்கள். தசைநாரும் அவைகளின் அசையும், ஜீரணமும், ஆகாரம் தேகத்தில் சேர்தலும், உடல் நலம் பேணல்.

மானிட தேகத்தின் பற்பல அவயவங்களேயும், அவற்றின் தொழில்களேப்பற்றிய அறிவு, உடற்கூறு சாஸ்திர படங்கள் வேண்டும். எலும்புக்கூடுபோன்ற படங்களே பிள்ளேகள் வரையலாம்.

நல்ல பழக்கங்கள் பிள்ளேகளிடத்தில் உண்டாதல், தேக சுகமும் நன்னடக்கையும் விருத்தி செய்தல். தனிப்பட்ட ஆட்களின் சுகமும் பொதுஜன சுகமும்; ஆகாரம், சுத்த ஆகாயம், மானிட தேகத்திற்கு அவசியமான தேகாப்பியாசங்களும் ஓய்வும்; வெவ்வேறு உணவுப் பொருள்களின் மதிப்பும்; வியாதிக்குக் காரணமும், அவற்றைத் தடுக்கும் முறையும்; சாதாரண வியாதிகளும், அவைகள் வாராமல் தடுப்பது எப்படியென்பதும்; புகையிலே, அபினி, கஞ்சா, மதுபான வகைகள்; இவற்றை உபயோகிப்பதனுல் சுகத்துக்கு எவ்வாறு கேடு விளேகின்றனவென அறிவு பெறுதல்.

அரசாங்கம் என்பது என்ன? அது நமக்கு என்ன செய்கிறது? அரசாங்கத்தோடு நாம் எவ்வாறு ஒத்துழைப்பது? அரசாங்கத்தாரின் பற்பல இலாக்காக்கள், அரசாங்க அமைப்பு; அரசர், சக்கரவர்த்தி, பார்லிமெண்ட், இந்தியதேசக் காரியதரிசி, கவர்னர் ஜெனரல், என்று அழைக்கப்படும் ராஜப்பிரதிநிதி; மாகாண கவர்னர்கள், மந்திரிமார், அரசாங்க இலாக்காக்கள், ஜில்லா, கிராம உத்தியோகஸ்தர்கள், அவர்களின் முக்கிய தொழில்கள். அகில இந்திய சட்டசபைகள், மாகாண சட்ட

சபைகளும், கிராம முன்னேற்றத்திற்கும் உள்ள சம்பந்தம். மந்திரி சபைகளின் அமைப்பு, வாக்குரிமையின் மதிப்பு; தேர் தல்கள், பஞ்சாயத்தினர் தொழில்கள்; ஜில்லா போர்டார்கள், நகரசபைகள், கூட்டுறவு சங்கங்கள்.

கடவுள் பக்தி இராஜபக்தி தேசபக்தி: நமக்கும் நம் நாட் டிற்கும் நாம் செய்யவேண்டிய கடமைகளும், நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும். ஜனக்கூட்டத்தாரின் ஐக்கிய மும், ஒரு கூட்டத்தாருக்குள்ளும் வகுப்புக்குள்ளும் சமஉரிமை காட்டுதல். ஹரிஜனங்கள், தாழ்ந்த வகுப்பினர் முதலியோர்.

ரஸ்தாவில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி மேற்கொண்ட பாடங்கள். நான்காம் வகுப்பில் படித்த பாடங் களைத் திருப்பிப் பார்த்தல்.

1. வண்டிகள் போக்கு வரத்தைக் காட்டும் கைச்சைகை கள் கற்றல்.

2. சைக்கிள், வண்டி, மோட்டார் சைக்கிள், மோட்டார் பஸ் முதலியன.

3. ரஸ்தாவில் ஏற்படும் ஆபத்துகளை விலக்கல்.

சங்கீதம்—Music:

சங்கீதமுறை ஞானம்:— ஹெச்சுஸ்தாயி வரிசைகளும், தக்குஸ்தாயி வரிசைகளும்.

வாய்ப்பாட்டுகள்:— ஆதிதாளம், ரூபகதாளங்கள் வரும் பாட்டுகள். அவற்றில் பல்லவி, அனுபல்லவி சரணங்கள் அடங் கிய 10 பாட்டுகள். அந்தந்த இடங்களிலுள்ள கதைப்பாட்டு களும் சேர்த்துக்கொள்ளலாம்.

இல்லறவேலை—Home Craft.

சுக வாழ்க்கைக்குச் சுத்தம் அவசியம்:— பள்ளிக்கூடம், ஒட்டறை அடித்துப் பெருக்கிச் சுத்தம் செய்தல். தூசி அண் டாத இடங்களில் அந்தந்தப் பொருள்களை அதனதன் இடத் தில் வைத்தல்.

அவரவர் சுகம்:— தேகசுத்தமும் குளிப்பும், எண்ணெயின் உபயோகமும்; சோப்பு அல்லது அவ்வவ்விடங்களில் கிடைக்கும் எண்ணெய் அழுக்கு முதலியவற்றைப் போககும் பொருள்களைக்கொண்டு எண்ணெய்ப் பசையையும், அழுக்கையும் போக்குதல்.

சுத்தமான உடை:— துணிகளைத் துவைப்பதின் அவசியமும், அவற்றை எப்படித் துவைப்பது என்று அறிவதும், துணிகளில் படும் காய்கறிக் கறைகளைப் போக்குவதும், அவற்றை மடித்து அமுக்கி வைத்தலும்.

சுத்த ஆகாரம்:— புத்தம் புதியதும் சுத்தமுமான சாப்பாட்டுப் பொருள்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தல்; காய்கறிகளையோ அல்லது மீனையோ எவ்வாறு சுத்தப்படுத்தல், சமைக்கும்போது எடுத்துக்கொள்ளவேண்டிய ஜாக்ரதை; ஆகாரத்தில் தூசிவிழாமலும், ஈ மொய்க்காமலும் மூடிவைப்பதின் அவசியம்; சுத்தம் ஒழுங்கான பழக்கத்தின் அவசியம்.

நாம் குடியிருக்கும் வீடு:— வீடும் வீட்டின் சுற்றுப்புறங்களையும் எப்படிச் சுத்தமாகவும், ஈயில்லாமலும் வைத்துக்கொள்ளுவது, சுத்த ஜலதாரைகள்; சுத்த ஆகாயத்தின் அவசியம்; சுத்தக்காற்றும் சூரியவெளிச்சமும்; தண்ணீர் வசதி, குளங்களையும், கிணறுகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்

சுகமாக வாழ்வதற்கு அவசியமான மிகக்குறைவான தட்டுமுட்டு உபகரணங்கள்: படுக்கைகளைப்பற்றிய கவனம், குடியிருக்கும் அறைகளில் சாமான்களை ஒழுங்காய் வைத்தல்; சமையல் அறையில் வெளிச்சம், காற்று, சமையல் பாத்திரம் முதலியனவற்றில் கவனம்; சமையல் அறையை எப்படிச் சுத்தமாய் வைத்துக்கொள்வது. வீட்டில் விழும் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தல், சாதாரணப் பாத்திரங்கள் அவைகளைச் சுத்திசெய்தல்; தூசி, அழுக்கு எண்ணெய்ப்பசை ஆகிய இவை பாத்திரங்களில் படிவதின் காரணம்.

சுத்தம் செய்வதற்கான பொருள்கள்:— பச்சைத்தண்ணீர், சுடுதண்ணீர், சோப், சோடாஉப்பு அவ்வவ்விடங்களில் கிடைக்கும் சிலபழங்கள், சில மரங்களின் பட்டைகள், எண்ணெய்ப்

பசைகளை நீக்கத்தக்க சாம்பல், மணல் முதலியன. பித்தளை வெண்கலம் முதலிய பாத்திரங்களைத் தேய்த்துப் பளபளப்பாக்குதல். அழுக்கைத் தடுக்கும் பொருளாக வார்னிஷ் பூசுதல்.

தீப்பற்ற வைக்கும் விதம், வயதானவர்களுக்கேற்ற ஆகாரம் பழங்களை ஆகாரமாக உபயோகித்தல். குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் ஏற்ற ஆகாரம்; அப்படிப்பட்ட இருவகையான ஆகாரம் தயாரித்தல்.

ஊசியால் தையல்வேலை செய்தல்:— நாடாவை ஒன்று சேர்த்து நீவி பாவாடையுடன் சேர்த்தல்; பிள்ளைகளுக்குத் தெரிந்த எல்லாத் தையல்களையும் உபயோகித்துப் பாவாடை தைத்தல்; ஜம்பா அல்லது ரவிக்கைகளை வெட்டித் தைத்தல்.

வெட்டின துணியோரங்களில் பொத்தான் துவாரத் தையலும், பொத்தான் துவாரம் வெட்டலும், நூல்களை எண்ணிச் சிறிதாய்க் கிழிந்த கிழிவை இழைபோடல், (darning) டார்னிங் செய்தல்; ஒட்டுப்போடல்.

துணியில் அடையாளங்கள் போட்டு குறுக்குத் தையல் தைத்தல். இறகு, சங்கிலி கெட்டி என்ற பலவித அழகு தையல் தைத்தல். அந்த வருஷத்துக்கு எடுத்துக்கொண்ட வேலைகளில் மேற்கூறிய அழகு தையல்கள் காண்பிக்கவேண்டும். பைகள் அல்லது குழந்தைகளின் சட்டைகள் பின்னுதல்.

List of Handi crafts for Standards I to V.

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்குரிய கைத்தொழில்களின் ஜாபிதா.

1 களிமண் வேலை:— உருவங்கள், கருகட்டி, வார்த்தல். சக்கரத்தின் உதவியால் பானைமுதலிய செய்தல்.

2 காகிதவேலை:— கதைகளின் விளக்கப் படங்களைக் காகிதத்தாலும் அட்டைகளாலும் தயாரித்தல்.

3 அட்டைவேலை.

4 நார்வேலை.

5 பாய் பின்னல்.

6 கூடை முடைதல், கயிற்றால் பை, வலை பின்னல்.
7 இலேசான மரப்பலகையினால் (plywood) மாதிரி உருவங்கள்; பொம்மைகள். பூவர்ணமொட்டுகள் (fret work)
8 சாதாரண பைண்டிங் வேலைகள். (பெட்டிகளும் புஸ்தக அட்டைகளும் செய்யப் பழகுதல்)
9 ஸ்டென்ஸில் வேலையும், ஸ்டென்ஸில் வெட்டு வேலைகளும்.
10 விஞ்ஞே வெட்டு வேலைகள்.
11 தோல்வேலை.
12 மணி, பாசி வேலைகள்.
13 துவாரமுள்ள சிறு அட்டைகளைக் கொண்டு பூ வேலை நெசவு, சிறு தறிகளில் நெசவு.
14 ஊசி வேலைகளும், பூ வேலைகளும்.
15 உருண்டைப் பிரம்பு வேலை.
16 கோரைப்புல் வேலை
17 வலை பின்னல்.
18 கைத்தடிக்கு வர்ணமிடுதல்.
19 பொம்மைகள் செய்தல்.
20 மெல்லிய மரத்தில் பலவித வேலைகள்.
21 நூல் நூற்றல்.

Minimum Equipment-Furniture, Standard I to V.

ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை உள்ள பாடசாலைக்கு அவசியமான சாமான்கள்.

1 சம்மணம் போட்டு உட்காரும் பாய், கிராமக் கணக்குப் பிள்ளை சாய்பு மேஜை.

2 தலைமை ஆசிரியருக்கு வேண்டிய நாற்காலியும் இழுப்புப்பெட்டி உள்ள மேஜையும்.

3 உதவி ஆசிரியர்களுக்கு ஒரு கைப்பிடியில்லாத நாற்காலியும் ஒரு மேஜையும்.

4 குறைந்தது 4 அடி நீளம் 3 அடி அகலமுள்ள கரும்பலகையை நிறுத்தி வைக்கும் கால்களுடன் அல்லது சுவரில் செய்த கரும்பலகை ஒவ்வொரு ஆசிரியருக்கும் தேவை.

5 ரிஜிஸ்டரும், பாடசாலைப் புஸ்தகங்களும் வைத்துக் கொள்ளத்தக்க ஒரு பெட்டி.

6 ஒரு கடிகாரம்.

7 பொருள்காட்சிப் பொருள்களை வைக்க ஒரு அலமாரி அல்லது நிறுத்துப் பெட்டிகள்.

8 சிறுவர்களுக்கேற்ற புஸ்தகங்களடங்கிய ஒரு புத்தக நிலயம்.

9 மண்வெட்டி, கடப்பாறை, களைக்கொத்து தோட்டக் கத்தி, தண்ணீர் ஊற்றக்குடங்கள் அல்லது வாளிகள்.

எல்லாப்பாடசாலைக்கும் அவசியமானவை.

1 பாடசாலைப் பெயரெழுதிய ஒரு பலகை.

2 சட்டப்படி வேண்டிய ரிஜிஸ்டர்கள்.

லண்டன் மிஷன் பிரிண்டிங் பிரஸ், ஈரோடு.

செய்முறைக் கல்வி

THE ACTIVITY METHOD IN EDUCATION (Tamil)

OFFICE OF THE ... 9 AUG 1940 M...

By J. T. RAJANAYAGAM, Erode.

With a Foreward, By Rev. H. A. POPLEY.

இந்நவீனக் கல்வி நூலானது முதல் ஐந்து வகுப்பு களுக்கேற்ற பன்னிரண்டு வித்தியாசமான மாதிரி உதாரணங்களுடன், ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள் பலவகைக் கைவேலைகளின் மூலமாய்க் கல்வி கற்க வேண்டுமென்று சென்னை கல்வி இலாகா அதிகாரி களால் 1939-ம் ஷ புதிதாய் தயாரித்துள்ள பாடத் திட்டத்தை அனுசரித்து தெளிவாக எழுதப்பட்ட ஓர் நூல்.

XXVI + 252 Pages

Rs. 1-12-0 (Nett)

Printed at the London Mission Pilkington Press, Erode.